**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 204 of 2024

DATE :12.02.2026

Depositions of witness for Prosecution

PW 11

| | | | |
|---|---|---|---|
| Name | ஆறுமுகம் | Caste | |
| Father/Husband's Name | | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of February 2026

**(எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு. மாரீஸ் ஆஜர்)**

**முதல் விசாரணை –**

நான் தற்பொழுது தேனி மாவட்ட Q பிரிவு குற்ற புலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 12.08.2022 அன்று வத்திராயிருப்பு காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண். 156/2022 என்ற வழக்கினை என்னுடைய மேல்விசாரணைக்காக எடுத்துக் கொண்டு, மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் மருத்துவர் ஷேக் இக்பால் உசேன் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டை பெற்றேன். **மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் மருத்துவர் நிர்மல் குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை மருத்துவர் கலைச்செல்வி என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்று பெற்றேன். **மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 13.09.2022 அன்று சாட்சி பூரணலதா என்பவரை விசாரணை செய்து வாகன ஆய்வு அறிக்கை பெற்றேன். **மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சி

வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை மருத்துவர் சுரேஷ்குமார் என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி காவலர் சரவணகுமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 07.02.2023 அன்று எதிரி பூங்காவனம் என்ற கருப்பையா என்ற பேமஸ் கருப்பையா என்பவரை கைது செய்து தக்க இரு நபர் பிணையில் விடுவித்தேன். பின்னர் இறந்த நபருக்கு உடற்கூறாய்வு செய்த மருத்துவர் முகமது நாசிம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய உடற்கூறாய்வு சான்று பெற்றேன். **உடற்கூறாய்வு சான்று அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் ஏற்கனவே பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தான் மேல்விசாரணை செய்தேன் என்றால் சரிதான். விபத்து சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதி 13.06.2022 என்றால் சரிதான். ஆனால் முதல் தகவல் அறிக்கையானது 15.06.2022 அன்று காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதற்கு காரணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் எந்த தேதியில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 12.08.2022. விபத்தில் சிக்கிய வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை தெரிந்து கொள்ள அதன் பதிவு சான்றிதழை நான் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

ஆனால் இறுதி அறிக்கையில் விபத்தில் சிக்கிய வாகனம் வாதிக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்தில்

காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற 108 ஆம்புலன்ஸ் வாகனத்தின் ஓட்டுனர்களை சாட்சியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அபி கணேஷ் என்பவருக்கு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் வழங்கிய விபத்து பதிவேட்டில் மது வாடை வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேலும் விபத்து பதிவேட்டில் தன்னிச்சையாக விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் சாலை சுமார் 30 அடி அகலம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் விவசாய பணிகள் செய்வார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த தனிநபர் சாட்சிகளை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன்.

நான் பார்க்கும் பொழுது சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த வயல் வெளியில் அறுவடைகள் செய்யப்பட்டிருந்ததா? அல்லது செய்யப்படாமல் இருந்ததா என்றால் அறுவடை பணி முடிந்து விட்டது. 15.06.2022 அன்றைய தினமே சார்பு ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படும் நெல் மூட்டைகள் யாருக்கு சொந்தமானது என்றும் எத்தனை நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது என்றும் சார்பு ஆய்வாளர் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளார் என்றால் எத்தனை நெல்முறைகள் இருந்தது என்று குறிப்பிடவில்லை. ஆனால் பின்னர் விசாரித்து நெல்மூட்டைகள் ஆஜர் எதிரிக்கு சொந்தமானது என்று தெரிந்து கொண்டார்.

ஆஜர் எதிரிக்கு விபத்து சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்துக்கு அருகில் அவருக்கு சொந்தமான தோப்புகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஊருக்கு உள்ளே உள்ள தோப்பில் இருந்து நெல்முறைகள் எடுத்து வரப்பட்டு சம்பவ இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. விபத்துக்குள்ளான வாகனத்தை ஒரு மாதம் கழித்து தான் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன அபி கணேஷ் மது அருந்தியுள்ளார் என்பதை மறைக்க பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் வழக்குக்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு